# 22 இலங்கைச் சைவ இலக்கியங்கள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு "சிவபூமி" எனப் போற்றப்படும் இலங்கையில், சைவம் தழைத்தோங்கவும், மக்கள் தாம் அனுபவித்த சொல்லொணாத் துன்பங்களிலிருந்து விடுபடவும் வழிபாட்டு மரபு உறுதுணை புரிந்தது. காலத்தின் தேவை கருதித் தனிமனிதர்கள் தாம் சமயத்தின் மீது கொண்டிருந்த பற்றின் காரணமாகவும் சமயத்தின் பெருமையை நிலை நிறுத்தவும் சமய நம்பிக்கைகளும் உண்மைகளும் அழிந்து விடாது பேணிக் காக்கவும் பல்வேறு இலக்கியங்களைப் படைத்தனர். இவை நலிவடைந்த சமயத்தின் பெருமையையும், புகழையும் அழியாவண்ணம் இன்றுவரை பாதுகாக்கும் பெருமைக்குரியன. இவை பாரம்பரியமாக இலங்கையில் சைவமக்களிடையே பாராயணம் பண்ணப்படுகின்றன. பெரியார்களால் இயற்றப்பட்ட சைவசமய இலக்கியங்களைப் பிரதானமாக மேல்வரும் கூறுகளில் அடக்கலாம்.

1. **விரதமகிமை கூறும் இலக்கியங்கள்** - பிள்ளையார் கதை, சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம் போன்றவை.

2. **தலமகிமை கூறும் இலக்கியங்கள்** - திருக்கரைசைப் புராணம், கண்ணியவளை குருநாதசுவாமி கிள்ளைவிடுதூது, வெருகல் சித்திர வேலாயுதர் காதல், கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, புலியூரந்தாதி போன்றவை.

3. **சமய நம்பிக்கைகளை வலியுறுத்தும் இலக்கியங்கள்** - கண்ணகி வழக்குரை காதை, காமன் தகனம், காத்தவராயன் கூத்து, பொன்னர் சங்கர் கூத்து, அர்ச்சுனன் தபசு போன்றவை.

ஒல்லாந்தர் காலத்தில் விரத மகிமையைக் கூறும் இலக்கியங்களைப் படைத்தவர் எனும் வகையில் சுன்னாகத்தில் 300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த **வரத பண்டிதர்** குறிப்பிடத்தக்கவர். பிரதான விரதங்களான பிள்ளையார் சஷ்டி, சிவராத்திரி விரதம், ஏகாதசி விரதம் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து விநாயகர், சிவன், திருமால் ஆகிய தெய்வங்களின் திருவிளையாடல்கள், அற்புதங்கள், இவ்விரதங்களை அனுட்டிப்பதன் பயன், பயன் பெற்றவர்களது வரலாறுகள் என்பவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் இவரால் பிள்ளையார் கதை, பிள்ளையார் புராணம், சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், குருநாத சுவாமி கிள்ளை விடுதூது, அமுதசாகரம் முதலான பயன்தரு இலக்கியங்கள்

பாடப்பட்டன. தனிமனிதரொருவர் ஈழத்தின் சைவ இலக்கிய மரபைப் பேணிக் காத்தமைக்கு வரத பண்டிதர் சான்றாகிறார்.

## அ. பிள்ளையார் கதை.

காலத்தின் சமயத் தேவையுணர்ந்து வரதபண்டிதரால் எழுதப்பட்ட தலை சிறந்த இலக்கியமாகப் பிள்ளையார் கதை காணப்படுகிறது. சிறப்பான 744 செய்யுள் அடிகளைக் கொண்ட ஆசிரியப் பாவாலாகிய இந்நூல் பாராயண மரபை பின்பற்றி எழுதப்பட்டுள்ளது. பிள்ளையார் விரதங்களில் ஒன்றான விநாயக சஷ்டி விரதத்தின் வரலாறு மகிமை, நோற்கும் முறை, அதன் பயன் என்பவை இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

**வெள்ளை எருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த**
**பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி**
**நோற்றார் மிகவாழ்வார் நோலா தருகிருந்து**
**கேட்டோர்க்கும் வாராது கேடு''**

என பிள்ளையார் நோன்பின் சிறப்பு வியந்து கூறப்பட்டுள்ளது. ஆனைமுகன் வரலாறு, கயமுகாசுரனை அழித்து மூஷிக வாகனமாக்கியதும், ஆவணிச் சதுர்த்தி விரதச் சிறப்பும், மார்கழி விநாயக சஷ்டி விரத மகிமையும், விநாயகனைக் கருமங்களின் ஆரம்பத்தில் வணங்க வேண்டியதன் அவசியமும், சண்முகன் பிறந்த கதையும், திருமால் பாம்புருவானதும், திருக்கார்த்திகையின் பின்வரும் விநாயக விரதச்சிறப்பும், அதனை பாம்புருவான திருமாலும் இலக்கணசுந்தரி என்பாளும் அனுட்டித்துச் சாப விமோசனம் பெற்றமையும் இந்நூலிற் கூறப்பட்டுள்ள.

கார்த்திகை கழிந்த பின்நாளில் வருகின்ற இருபத்தொரு நாட்கள் விநாயகரை அர்ச்சித்து ஒரே மனமாய் விநாயக சஷ்டி விரதத்தை நோற்கும் மக்கள் 21 நாளும் இச்சிறு நூலைப் பிள்ளையார் பெருங்கதை என்ற பெயரில் பாராயணம் பண்ணுவர். சாதாரண மக்கள் தாம் அனுட்டிப்பது விநாயகசஷ்டி விரதம் என்பதே அறியாது அனுட்டிக்க இந்நூல் வழிகாட்டுகின்றது.

**பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்**
**மன்னும் நவமணியும் வந்தணுகும் எனவும்,**
**கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்**
**பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு. எனவும்,**
**சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்**
**சாலமிகும் வெங்கலியார் தாம் நோற்கில் - மேலைப்**
**பிறப்பெல்லாம் நல்ல பெருஞ்செல்வ மெய்திச்**
**சிறப்பிலே வாழ்வார் சிறந்து........**

எனவும் விநாயகர் நோன்பின் சிறப்பும், பேறும் இந்நூலில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

## ஆ. கண்ணகி வழக்குரை காதை.

ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் ஈழத்தில் எழுந்த தலைசிறந்த இலக்கியமாக கண்ணகி வழக்குரை காதை கொள்ளப்படுகிறது. சிலப்பதிகார நூலின் கதையில் பல நீக்கங்களுடனும், புதிய சேர்க்கைகளுடனும் பொதுமக்களுக்கேற்ற வகையில் புதியதோர் இலக்கியமாக 14ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பில் வாழ்ந்த **சக வீரர்** என்பவரால் செய்யப்பட்ட நூலாகும். 2219 பாடல்கள் கொண்ட இந்நூல் அகவல், வெண்பா சிந்து முதலிய யாப்புக்களால் ஆனது. நூற்கதைகள் பாடல்கள் என்பவற்றின் எண்ணிக்கை பல ஏடுகளில் வேறுபட்டுக் காணப்படுகிறது.

கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையதாகக் காணப்படும் இதனோடிணைத்து சிலம்புகூறல், கோவலன் கதை என்பவையும் படிக்கப்படுவது மரபாகும். திருக்குறள், இராமாயணம், பாரதம், நளவெண்பா, கந்தபுராணம் போன்ற நூல்களில் காணப்படும் நல்ல பல விழுமியக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்ட இந்நூல் 10 காதைகளைக் கொண்டது.

மட்டக்களப்புப் பிரதேசத்திலே கண்ணகையம்மன் கோயில்களிலே ஆண்டுதோறும் விழாக்காலங்களில் பாராயணம் பண்ணப்படும் இச்சிறுகாவியம், வடக்கில் கோவலனார் கதையென்றும், வன்னியில் சிலம்புகூறல் எனவும் கண்ணகையம்மன் வழிபாட்டுக் காலங்களில் பாராயணம் பண்ணப்படுகிறது. எனினும் இதில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வரலாறு எங்கும் கூறப்படவில்லை.

மட்டக்களப்பில் படிக்கப்படும் கண்ணகி வழக்குரையில் வெடி அரசன், வீர நாராயணன் மற்றும் விளங்கு தேவன் போர்களும், மீகாமான் காதை, தாரியோட்டு மணி வாங்கிய காதை, மாதவி அரங்கேற்று காதை, பொன்னுக்கு மறிப்பு என்ற பாடல்கள் கண்ணகி வணக்கத்தோடும் பூசை முறைகளோடும் தொடர்பில்லாதவைகளாகும். ஆனால் வற்றாப்பளை கண்ணகி வழக்குரையில், கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புள்ள விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

கண்ணகி பாண்டிய மன்னனுடன் வாதாடல், பாண்டிய மன்னனும் தேவியும் இறத்தல், அவள் வன்னிமரத்தில் சங்கமமாதல் போன்ற விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

**பாண்டியனைப் பழிகொண்ட பைந்தொடியே யென்தாயே**
**தீண்டாத கற்புடைய செழுந்திருவே தெய்வதமே**
**வேண்டாது செய்தாலும் வேறுமன சாகாதே**
**பூண்டசினம் மாறியிப்போ பூங்கொடியே கண்பாராய்**

என்ற கண்ணகி வழக்குரை குளிர்ச்சிக்காதை 31ஆம் பாடல் இங்கு அவதானிக்கத்தக்கது. இக்காவியம் ஆலயங்களிற் பாடப்படும் போது பறை, உடுக்கு போன்ற கிராமிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழ் இலக்கிய, இலக்கணப் பயில்வுப் பாரம்பரியத்தின் சிறப்பை உணர்த்துவதாக விளங்கும் இக் காவியமானது செந்நெறிப் பாங்கான இலக்கியமாகக் காணப்படுகின்றது. இதில் நாட்டார் பாடல் ஓசை, மரபு என்பன விஞ்சிக் காணப்படுகின்றன. சகுனம், சாத்திரம், நம்பிக்கைகள், சடங்குகள் முதலானவற்றை மக்கள் வாழ்க்கை நெறி முறைகளுக்கு உட்படுத்தி மக்கள் வாழ்வியலோடு இணையச் செய்வதில் இக்காவியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அத்தோடு ஈழத்து நாட்டுக்கூத்து மரபைத் தழுவி வைத்தியம், சோதிடம் முதலிய அறிவியற் துறைக் கூறுகளையும் மருந்து, மந்திரம், வசியம் முதலான கிராமிய நம்பிக்கைக் கூறுகளையும் மக்களுக்குத் தெளிவு படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இவ்வகையில் கண்ணகி வழிபாட்டிற்குப் பெருமைசேர்ப்பதாக இக்காவியம் அமைகின்றது.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1. விரத மகிமை கூறும் இலக்கியங்கள் மூன்று எழுதுக.
2. பிள்ளையார் கதை எனும் நூலின் ஆசிரியர் யார்? அவர் எழுதிய ஏனைய நூல்களைக் கூறுக.
3. கண்ணகி வழக்குரை காதை எனும் இலக்கியம் கூறும் சமய நம்பிக்கைகளை எழுதுக.
4. ஈழத்துச் சைவ இலக்கியங்கள் படைக்கப்பட்டமைக்கு அடிப்படையான இரு காரணங்களைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

- ஈழத்தில் எழுந்த சைவ இலக்கியங்களையும் அவற்றைப் பாடியவர்களையும் அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
- காமன் தகனம் தொடர்பான விடயங்களை ஆசிரியர் துணையுடன் தேடித் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- சமயத்தின் தொன்மைக்கும் நிலைபேற்றிற்கும் காரணமானவை சமய இலக்கியங்களாகும்.
- ஒல்லாந்தர் காலத்தில் சமய இலக்கியங்களில் வரதபண்டிதரின் இலக்கியங்கள் முதன்மை பெற்றன.
- ஆரியச்சக்கரவர்த்திகள் கால சமய இலக்கியங்களில் கண்ணகி வழக்குரை காதை பிரதானமானது.
- சமய நம்பிக்கைகள், வழக்காறுகள், சாத்திரங்கள், சம்பிரதாயங்களையும் சைவ நெறிமுறைகளையும் நிலைக்கச் செய்ததில் இவ்விலக்கியங்கள் முதன்மை பெறுகின்றன.